RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s623

OPEN ACCESS

# பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் 'தலவரலாறு காட்டும் பண்பாடுகள்'

**ஆ. சசிகலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

# Cultures Shown by the History of Holy Places in Pillaittamil Literature

**A. Sasikala** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: kalakamala1981@gmail.com

Received: 19-10-2021
Revised: 02-05-2022
Accepted: 16-05-2022
Published: 17-07-2022

Check for updates

**ABSTRACT**

One of the main civilizations of Tamil is culture. It has been said in ancient times that 'Characterization is singing and behaving'. Considering this culture, the cultural elements that are taking place in literature have been studied in detail. 'Pillaithamil' is a genre of Tamil literature in which poets imagine their favourite God, the Goddess, the king, and eminent poets as small children and sing. In this way, there are seven Pillaithamil literatures about God Muruga under study. This study explains in detail the history and culture of the Pillaithamil literature, such as Thiruchendur Murugan Pillaithamil, Kumaramalai Murugan Pillaithamil, Athitthala Murugan Pillaithamil, Seyur Murugan Pillaithamil, Muthukumaraswamy Pillaithamil, Tiruporur Murugan Pillaithamil, and Etikku Murugan Pillaithamil. This review is based on establishing and telling about ancient Tamil culture through the use of architecture, painting, and sculpture from their history.

**Keywords:** Culture, Pillaithamil, Pillaithamil literature, Murugan, Tamil culture

## முன்னுரை

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று சங்கப்புலவரான ஔவையாரின் சொல்லிற்கிணங்க ஆலயங்கள் அல்லது தலங்கள் தெய்வங்களின் இருப்பிடமாகவும் மக்களுக்கு பக்திநெறியின் ஊற்றாகவும் திகழ்ந்து வருகின்றன. தமிழ்நாட்டில் பண்பாட்டை மேம்படுத்தும் விதமாக பல புண்ணியத் திருத்தலங்கள் மக்களின் நற்பயனுக்காக அமைந்துள்ளன. பழமையும் பெருமையும் பண்பாடுகளையும் வாய்ந்த இத்தமிழ்த் தலங்களைப் போன்று பெருவாரியான எண்ணிக்கையை வேறு எந்நாட்டிலும் காண்பது அரிதானது. ஆனால் தமிழ் மக்களின் பக்தியுணர்வும் கலையுணர்வும் பண்பாடும் கலாச்சாரமும் சமுதாய மதிப்பும் கற்பனைத் திறனும் ஒருங்கே கொண்டு அமைந்துள்ளது. இறைவன் மற்றும் இறைவியின் திருவருள் விளங்கிப் பெரும் ஆற்றல் ஊற்றுக்களாகவே திருத்தலம் வீற்றிருக்கின்றன. ஒவ்வொரு தலத்திற்கும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தனித்தன்மையும் தெய்வீகமாண்பும் கட்டிட வேலைப்பாடுகளும் நிறைந்துள்ளதால் பண்பாட்டில் சிறந்து விளங்குகின்றது.

இத்திருத்தலங்களை எண்ணும் போது அத்தலங்களின் பெருமை அனைவரின் மனகண்முன்னே பளிச்சிடுகின்றன. அத்துடன் கோயில் கலை என்றுமே தொன்மைச் சிறப்புகளை வெளிப்படக் குறிப்பிடுகின்றதd. தமிழ் நாட்டிற்கு வருகை புரியும் பலரும் நமது கோயிற்கலையான பண்பாட்டைக்

கண்டு வியக்கும் அளவிற்கு அமைந்துள்ளதால் தமிழகத்தின் பெருமையும் பண்பாடும் திரைக் கடல் கடந்தும் நிலைத்து நிற்கின்றது.

தொன்மை காலம் தொட்டே பண்பாடு என்னும் சொல், இலக்கியங்களிலும் வாழ்விaலும் மேற்கொண்டு வருகின்றன. ஆதலால் 'பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்" எனக் கலித்தொகைச் சங்கக்காலத்திலேயே பாடியுள்ளது (Viswanathan, 2007). பண்பாடு என்னும் பொருண்மையில் அமைந்த திருக்குறளுக்கு உரை வகுக்க வந்த பரிமேலழகர் பண்புடைமையாவது 'பெருமை' 'சாண்றண்மைகளில்' தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" என விளக்கியுள்ளார். பண்பாடு நாம் கற்றனவும் கேட்டனவும் நிலை கெட உள்ளத்து நிலைத்து நிற்பது குணமோ நாம் செயலெல்லாம் மறந்து கடமை வழி நம்மை வாழ வழி காட்டுவது என்று குறிப்பிடுகின்றார்.

'பண்பாடு' என்னும் சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'Culture' என்ற சொல் பயன்பட்டு வருகின்றன. மேலும் 'Tiliage Improvement By training Intellectual development Cultivate என்பன பொருள்களில் அமைந்துள்ளன. The State of being cultivated' பொருள்களில் அமைந்துள்ளன.

'பண்பாடு' என்பதற்குப் பல கோணங்களிலிருந்து ஆராயப்படுகிறன்றன மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் தனித்து வாழ்ந்த மனிதனை இணைத்து வைப்பதே பண்படாகும். விலங்கிலிருந்து பிறந்த மனிதன் விலங்கு செயல்களோடு கண்டதை தின்று காட்டிலும் மேட்டிலும் திரிந்து வந்த போதிலும் நாகரீக வளர்ச்சியின் காரணமாக மெதுமெதுவாக வேறுப்பட்டவனாக தோன்ற காரணமாயினான். ஆதலால் மனித இனத்தில் பண்பாடு தோன்றலாயின என்பதனை உணர்த்துகின்றது.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் ஏறத்தள முன்னூக்கும் மேற்ப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தமிழில் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றுள் முருகப்பெருமான் பற்றிய ஏழு பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் வரும் அழகு குமரனான முத்து குமரன் வீற்றிருக்கும் தலத்தின் முழு வரலாறுச்செய்திகளில் வரும் பண்பாட்டுக்கூறுகள் பற்றி எடுத்துக் கூறும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது. மேலும் தல அமைப்புகள், மூர்த்தி, தல தீர்த்தம், தல அமைவிடம், தலம் திறக்கும் நேரம், தமிழ் இலக்கியங்களில் தலத்தை புகழ்ந்து பாடுதல் மற்றும் ஒவ்வொரு தலமாகச் சென்று இறையடியார்கள் பண்பாட்டு உணர்வுகளுடன் பாடிய விதம் போன்றவை மக்களுக்கு எடுத்து கூறும் நோக்கில் அமைந்துள்ளதை பற்றி கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது.

## தலவரலாற்றின் அமைப்பு முறை

'தலம்' என்பது "ஸ்தலா" என்ற வடசொல்லின் திரிபே தமிழ் வடிவமாகும். தலம் என்பதற்கு இடம் என்றும் பூமி என்றும் பொருள் கொள்ளலாம். மேலும் தலம் என்பதை உலகம் என்னும் பொருள்களில் வருவதை "ஏழ்தல முருவ விடைந்து" என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். இடம், பூமி, உலகம், தலைமை, நகரம் என்று பலவாறு பெயர்கள் பெற்று இருப்பினும் இறைவன் கோயில்கள் கொண்ட சிறப்பான ஊர்களே புண்ணிய பூமி எனவும் அமைக்கப்படுகின்றது. தலம் என்பதற்கு ஷேத்திரம் என்னும் பொருளில் அமைந்துள்ளன.

## கோயில்

பாரத நன்னாட்டின் பண்பாட்டு சின்னமாகக் கருதப்படுவது கோயில் தல வரலாறாகும். பாரதத்தின் பெருமையை மேம்படுத்த முக்கிய ஆதாரமாகத் திகழ்வது தலவரலாறு என்றே கூறலாம். நாம் அனைவரும் வணங்கும் அடியாரும் குருமாரும் கோயிலாbaர்களே ஆவார்கள். நாம் பாடும் பக்திப் பாடல்களெல்லாம் கோயிலின் இசைகளே ஆகும். நாம் காலையும் மாலையும் கேட்பது கோயில் மணிகளே. தமிழரின் பண்பாடுகள் அவர்களின் வாழ்வும் மனமும் கோயிலுணர்வில் கூடிக் குழைந்து நிற்கிறது. ஆதலால் மக்கள் அவர்களின் பாவத்தை நீக்கக் கூடியவை திருத்தலங்களே ஆகும். எனவே மாண்புற்ற திருத்தலங்களுக்குச் சென்ற வினைப் பயனை வாழ்விலிypருந்து விலகி வளமான வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## தமிழகக் கோயில்கள்

தமிழ் நாட்டில் பண்பாட்டை சிறப்பிக்கும் வண்ணமாக ஊர்தோறும் பல தெய்வங்கள் தோன்ற காணலாம். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் பழந் சொல்லுக்கேற்ப தொன்மை காலத்தில் மக்கள் தலங்களாகக் கருதி அழைக்கப்பட்டன. தாம்வாழப் புகுந்த இடத்தில் புதியதாய்க் கோயிலை அமைத்துக் கொண்டு வழிபட்டும் போற்றியும் பண்பாட்டை மேற்கொண்டு வந்தனர். அந்த வகையில் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 3500 க்கும் மேற்பட்ட திருத்தலங்கள் தோன்றியுள்ளன. இத்திருத்தலங்கள் அனைத்தும் அரசபரம்பரையினரால் அமைக்கப்பட்டு பண்பாட்டை வெளிப்படும் நோக்கில் அமைந்துள்ளன.

எனவே நலம் தரும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக பண்பாட்டின் சாரம்சமாக திருத்தலங்களே துணை நிற்கின்றd. இதன் அடிப்படையில் திருச்செந்தூர், எட்டிக்குடி, அத்தித்தலம், சேயூர், குமரமலை, திருப்போரூர், புள்ளுருக்கு, வேளூர் முதலிய பதிகளில் வீற்றிருக்கும் தெய்வங்களின் தலவரலாறுகளை பற்றி உலகிற்கு வெளிக்காட்டும் வகையில் எடுத்துக்கூறப்படுகின்றதd. மேலும் ஒவ்வொரு தலங்களும் தோன்றுவதற்கு ஒரு தலவரலாறுகளை முதன்மையாக இடம் பெற்று வருவதையும் mதன் பண்பாடு தோன்றுவதை பற்றியும் விளக்கப்படுகிறது.

தலவரலாறு அன்று முதல் இன்று வரை மக்களை நல்வழிப்படுத்தி வருகின்றது. திருத்தலத்தில் வீற்றிருக்கும் தெய்வங்களை வழிபட்டு தீர்த்தங்களில் நீராடிச் சென்றவர்கள் தங்களுடைய வாழ்வில் பெறும் புண்ணியத்தை அடைகின்றனர். மக்கள் பண்பாட்டின் காரணமாக தலம் தலமாகச் சென்று வழிபடும் போது அத்திருத்தலத்தின் முழு வரலாறும் அறிந்தும் கேட்டும் வருகின்றார்கள். ஆத்தலத்தில் வீற்றருக்கும் 'தெய்வங்களின் சிறப்பும் பெருமையும் அதன் வாயிலாகத் தலத்திற்குரிய பெருமையையும் பாடுவது தலவரலாறு" என்று குறிப்பிடுகின்றார்.

தலச்சிறப்புகளுக்கு தல வரலாற்றுக் கதைகளே அடிப்படையாக அமைந்து வருகின்றன என்னும் கருத்திற்கு ஏற்ற வகையில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் பல தலவரலாறுகள் மூலம் பண்பாட்டு பதிவுகள் விரவி வருகின்றன என்பதனை இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

## தமிழில் தலவரலாறு

தமிழகத்தில் அமைந்துள்ள பெரும்பாலான தலங்களில் வீற்றிருக்கும் சிவபெருமான், திருமால், முருகப்பெருமான் மற்றும் உமையம்மை ஆகிய தெய்வங்களின் பெருமைகளையும்; தலவரலாற்றில்; கூறப்படுகின்றது. "கி.பி. பதினாறாம் நூற்றாண்டுகள் முதல் பத்தோம்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் தோன்றிய இலக்கியங்களைத் தன்வயப்படுத்தி அவற்றில் அமைந்து இருக்கும் பக்தி சுவையான தலவரலாற்றுக் கதைகளை எடுத்துக் கூறுகின்றது. தமிழலக்கிய வரலாற்றில் 12 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை 581 தலவரலாறுகள் தோன்றியுள்ளன" என்று கூறுகின்றார்.

## பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் வரும் தலவரலாறுகள்

இறைவன் மற்றும் இறைவி மீது பக்தியுணர்வு ஏற்படுவதற்கு ஏற்ற வகையில் பல்வேறு தலவரலாறுகளே பண்பாட்டுக் கூறுகளாக அமைந்து வருவதை பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றன இத்தலவரலாறுகள் சுட்டும் பழங்கதைகளும் பண்பாடுகளும் ஒவ்வொன்றும் எடுத்துக் கூறும் நோக்கில் முருகப்பெருமானை சித்தரிக்கும் திருவுருங்கள் ஒவ்வொன்றிற்குமான தெய்வீகவியல் வரலாறுகளை எடுத்துக் கூறுகின்றது. இக்கதைமரபுகள் அனைத்தும் பண்பாட்டை கூறி தெய்வீகவியல் வரலாறு எனும் ஓர் உயர்ந்த தன்மையினைச் சித்தரித்து மக்களின் ஆன்மாக்களின் மீது கொள்ளும் அருட்கோலங்கள் அனைத்தும் உயர் மரபாகிய பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இத்தெய்வீக மரபும் பண்பாடும் நிறைந்த தலத்தின் தலவரலாறும் கூறும் வகையில் முருகப்பெருமான் பற்றிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் ஆராயப்படுவதை பின்வருமாறு விளக்கப்படுவதை பற்றி

திருச்செந்தூர் முருகப்பெருமானின் தலவரலாறு, முத்துக்குமார சுவாமியின் தலவரலாறு, திருப்போரூர் முருகப்பெருமானின் தலவரலாறு, எட்டிக்குடி முருகப்பெருமானின் தலவரலாறு, குமரமலை முருகப்பெருமானின் தலவரலாறு, அத்திதல முருகப்பெருமானின் தலவரலாறு, சேயூர் முருகப்பெருமான் தலவரலாறு போன்ற ஏழு பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் முருகப்பெருமான் வீற்றிருக்கும் தலத்தின் சிறப்புகள் பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.

## 1. திருச்செந்தூர் முருகப்பெருமானின் தலவரலாறு

கன்னித்தமிழைப் போல என்றுமே இளமையோடு வீற்றிருக்கும் திருமுருகப்பெருமானின் அருட் சிறப்புகளையும் திருவிளையாடல்கள் பற்றியும் பாடியள்ளார். மேலும் தமிழையும் முருகப்பெருமானையும் ஒன்றாகக் காணுகின்ற திருக்காட்சிகள் பற்றியும் பகழிக்கூத்தர் நற்றமிழ் புலமையோடு இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் மிக்க புகழுடன் விளங்குவது திருச்செந்தூர் பிள்ளைத்தமிழாகும். இப்பிள்ளைத் தமிழில் வரும் தலவரலாற்றுச் செய்திகளையும் சிற்பக்கலையாகிய பண்பாட்டை அறிதலின் வாயிலாக ஒவ்வொரு பிள்ளைத்தமிழில் வரும் வாழ்வியல் நெறியும் சேர்ந்து வருவதை காண முடிகின்றன (Thurai, 2003a).

### தல அமைப்பு

ஐந்திணைகளுள் ஒன்றான நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த பகுதியில் அமைந்துள்ளது. ஆறுபடை வீடுகளுள் பிற ஐந்தும் அதாவது திருப்பரங்குன்றம், திருஆவின்குடி, திருவேரகம், குன்றுதோராயம் மற்றும் பழமுதிர்ச் சோலை ஆகிய படைவீடுகள் அனைத்தும் குன்றுகள் நிறைந்த இடமாக அமைந்து தமிழர் பண்பாட்டை நிலை நாட்டுகின்றன.

தமிழ் நாட்டில் நாகரீக பண்பாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும் சிறந்து விளங்கிய நகரம் திருச்செந்தூர் என்பதனை பற்றி

'உலகம் புகழ்ந்த ஓங்குயிர் விழுச்சீர் அலைவாய்" என்று வருகைப் பருவப் பாடலில் குறிப்பிடுகின்றது (Poomonathan, 1990).

இத்தலத்தின் இராஜகோபுரம் மூலஸ்தானத்தில் வீற்றியிருக்கும் முருகப்பெருமானின் பார்வை நோக்கும் வகையில் மேற்கு திசையில் பெரிய இராஜகோபுரம் அமைந்துள்ளது. இத்தலத்தில் கடலை நோக்கியவாறே முருகப்பெருமான் கிழக்கு திசையில் காட்சியளிக்கின்றார். முதன்மையான கோபுரம் முருகப்பெருமானுக்கு எதிரே அதாவது கிழக்கு திசையில் தான் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அப்பகுதியில் கடல் இருப்பதால் மேற்கில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது. இக்கோபுரம் தமிழின் பண்பாட்டை மெய்ப்பிக்கும் விதமாக 157 அடி உயரம்கொண்டு அமைந்துள்ளன. இக்கோபுரத்தின் உட்பகுதியில் ஒன்பது தளங்கள் உள்ளது. சண்முக விலாசம் என்னும் மண்டபமும் 120 அடி உயரமும் 60 அடி அகலமும் கொண்டுள்ளது. மேலும் 124 தூண்களுld; கட்டப்பட்டு பல அற்புத காட்சிகளையும் பண்பாடுகளையும் எடுத்துக் கூறும் நோக்கில் இத்தல வரலாறு அமைந்துள்ளது.

## 2. முத்துக்குமார சுவாமியின் தலவரலாறு

முத்துக்குமார சுவாமியாகப் புள்ளிருக்கு வேளூரில் வாசம் செய்யும் முருகப்பெருமானின் தல வரலாற்றில; கோயில் வடிவமைப்பிலும் பண்பாட்டுக் கூறுகளை பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றன.

### தல அமைவிடம்

திப்பு சுல்தானால் கட்டப்பட்ட இவ்வாலையத்தில் மதிமாலீஸ்வரர் மரகதாம்பிகை மற்றும் முத்துக்குமாரசுவாமி ஆகிய மூவருக்கும் தனித்தனி சன்னிதிகள் ஒரே வரிசையாக அமைந்துள்ள து.

இவ்வுருவங்கள் அனைத்தும் ஒரு பெரிய பாறை மீது அமைந்து கணப்படுகின்றன. கருவறைக்கு முன் அர்த்த மண்டபமும் முன் மண்டபமும் அழகிய கற்சிற்பங்களும் கூடிய மண்டபங்களில் பண்பாட்டை உணர்த்துகின்றது.

இத்தலத்தைச் சுற்றி வெளிப்பிரகாரத்தில் சூரியன் கன்னி மூலக் கணபதி தட்சிணாமூர்த்தி சண்டிகேஸ்வரர் துர்க்கை சனீஸ்வரர் காலபைரவர் நவகிரஹர் மற்றும் சந்திரன் ஆகிய தெய்வங்களின் நோக்கும் போது பண்டையத்தமிழரின் பக்தியுணர்வும் பண்பாடும் அரிய வைக்கின்றன.

பண்பாட்டில் ஒன்றாக அமைவது நம்பிக்கை. இந்நம்பிக்கயை மேம்படுத்தும் வகையில் இத்தலத்தில் உள்ள மண் தீராத நோய்ப்பிணியை போக்கவல்லது. ஆதலால் வைத்தியநாதன் என்ற பெயருடன் மக்களுக்கு காட்சியளிக்கின்றார். மக்களின் தீராத நோய் பிணியாகிய உடல் நோயையும் மனநோய்யையும் தீர்க்கின்றார் என்று மக்களின் நம்பிக்கையாக இன்றும் நிலவி வருகின்றது என்பதனை

“திருக்கோல முடனொடு மணக்கோல மானவன் செங்கீரை யாடிருளே

செத்து பிளக்கின்ற தெய்வங்களின் மணவாள செங்கீரை யாடியருளே’”

குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் காப்புப் பருவம் என்று குமருகுருபரர் குறிப்பிடுகின்றார். இத்தல மண்ணை உண்ட மக்களுக்கு பலவகையான உடற்பிணிகள் தீர்க்கின்றது என்பது மக்களின் நம்பிக்கை என்பதனை பற்றி.

“மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்

திரிபுரங்கள் தீயெழுத்தின் சிலைகைக் கொண்ட

போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்

போற்றாதே ஆற்றாதான் போக்கினேனே”

குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் வருகைப் பருவம் பாடல் -08. என்று முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் வருகைப் பருவத்தில் தலத்தின் கலையழகோடு கட்டப்பட்டுள்ளதால் பண்பாட்டுr; சிறப்பை குறிப்பிடுகின்றன (Thurai, 2003b).

## 3. திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ்

ஒரு முறை பிரளயத்தில் ஆறுமுறை அழிவை சந்தித்தது இத்திருப்போரூர் தலமாகும். இத்தலத்தை ஏழாவது முறை கட்டப்பட்டு வடிவமைத்ததை பற்றியும் பண்பாட்டு சிறப்பையும் பற்றி குறிப்பிடுகின்றன தமிழகத்திலேயே 'ஓங்கார வடிவமைப்பில் அமைப்பில்' அமைந்த தலமாகவும் திகழ்கின்றது. எல்லாத் தலங்களிலும் கோபுரத்தைக் கடந்து உள்ளே நுழைந்ததும் முன்னே கொடிமரம் அமைக்கப்பட்டு இருக்கும். இக்கொடி மரத்தில் வண்ண வண்ண சிற்ப கலை பொறிக்கப்பட்டுள்ளதால் பண்டைய தமிழரின் பண்பட்டு உணர் வெளிப்படுகின்றன. உணர்த்துகின்றது.

“இவ்வூருக்கு வடபால் முப்பது யாசனை தூரத்தில் போரூர்” என்னும்

“ஆறுமுகம் திருப்பதி ஒன்று உள்ளது. அஃது இப்போது மறைந்து

உள்ளது உன்னால் பழுதுபார்க்கப்பட்டு விளக்க முறுதல் வேண்டும்”

“அதன் பொருட்டே முருகன் மயில் வடிவில் வந்து உன்முன்னே

நினக்கு தன் வடிவத்தை மறைந்து நிற்பான் அவனே நினக்கு

ஆசிரியராக எழுந்தருளி உண்மையை விளக்குவான்”

சிதம்பர அடிகளார் திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ் முன்னுரை பக்-4) என்று திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழில் குறிப்பிடுகின்றது. மேலும் ஒரு காலத்தில் ஆற்காடு நவாப் மன்னனின் மனைவி தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு இருந்த நிலையில் மன்னன் சிதம்பர சுவாமிகளின் தெய்வீக சக்தியை உணர்ந்து இங்கு வந்த போது நவாப் மனைவிக்கு திருநீறு பூச அவரது வயிற்று வலி நீங்கியது. மகிழ்ச்சியடைந்த நவாப் மன்னன் திருப்போரூரில் சிதம்பர சுவாமிகள் எழுப்பும் முருகப்பெருமான் தலத்திற்காக 650 ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்கி தன்னுடைய பாண்பாட்டை நிறுவியுள்ளார் (Eramasamyppulavar, 1774).

## 4. எட்டிக்குடி முருகன் பிள்ளைத்தமிழ்

எட்டிகுடி முருகப்பெருமானின் பிரகாரத்தில் முருகப்பெருமானின் சூரபத்மன் வதத்திற்கு துணையாகச் சென்ற ஒன்பது வீரர்களின் திருவுரும் அழகான வேலைபாடும் கலையழகுடன் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் நடனமாடுவது போல கணபதி, வீரதேவர், சீனிவாச சவுந்தரப் பெருமான; ஆஞ்சநேயா; மனோன்மணி அம்மை, ஐயப்பன், மகாலட்சுமி, நவக்கரகங்கள், சனிபகவான பைரவர் போன்ற தெய்வ வடிவங்களிலும் பண்பாட்டையை உணர்த்துகின்றது.

“வளரெட்டிக்குடி முருகனொடிடவாவா அம்புலியே” எட்டிக்குடி முருகன் பிள்ளைத்தமிழ் அம்புலி வருவம் பாடல் 8 என்று அம்புலிப் பருவத்தில் குறிப்பிடுகின்றது (Poomonathan, 1909a).

## 5. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்

முன்னோரு காலத்தில் சேயூர் சுற்றிய எல்லை பகுதிகள் முழுவதும் சோழவம்சத் தரசர்களால் ஆட்சிச் செய்து வந்ததால் பண்பாட்டின் சிறப்பசம்சமாக இத்தலத்தை கட்டியுள்ளர் என்பதற்கு சான்றாக

“வைவத் துரந்தாடு முரகக்கு லேசன்மகன்

மககாகு மொரு தொண்டைமான்

வாரிதித் திரை நல்கு மன்னன் பெருபேர்

வரம்பெற்ற வொற்றி கொண்டான்

சைவத் தவப்பயனை யொத்தவன் வழிவந்த

தநயன் கழுக்குன்றனாந்

தக்க செம்பிய வளவன் வந்தனக்காலயம்”

அந்தககவி வீரராக முதலியார் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் சிறுத்தேர் பருவம் பாடல் 6) என்று அந்தகக்கவி வீரராகவ முதலியார் குறிப்பிடுகின்றார். சேயூர் முருகப்பெருமானின் திருத்தலத்தில் தெற்கு நோக்கி முதன்மை கோபுரம் அமைந்துள்ளது (Ainthagakavi Veeraraakava Muthaliyaar, 1902).

## 6. குமரமலை முருகன் பிள்ளைத்தமிழ்

புல்வயல் எனும் கிராமத்தைச் சேர்ந்த 'குமரன்' என்று அழைக்கப்படும் முதியவர் ஒவ்வொரு ஆண்டும் பழனி முருகப்பெருமானுக்கு காவடியை சுமந்துச் செல்லுவது தனது வாழ்வின் கடமையாக எண்ணி வாழ்ந்தவர். இக்குமரனுக்கு 80 வயது மிரகுந்ததாலும் உடல் தளர்வு ஏற்பட்டதாலும் பழனிக்குச் செல்ல இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையை உணர்ந்து கவலையுடனும் கண்ணீருடனும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த போது முருகப்பெருமான் கனவில் தோன்றி நீ இங்கு வர வேண்டாம். ஆனால் தான் அங்கு வந்து உனக்காக அம்மலையில் காட்சித் தருகின்றேன் என்று கூறி மறைந்துள்ளார். முருகப்பெருமான் வயதான குமரன் கனவில் வந்தற்குச் சாட்சியாக அவர் அருகில் விபூதி உத்ராட்ச மாலை பிரம்பு எலுமிச்சம் பழம் ஆகிய பொருட்கள் இருந்துள்ளது.

குமரனின் கனவில் நீ எங்கும் அலைய வேண்டாம். உன் காவடி பிரார்த்தனையை இங்கே பூர்த்திச் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினார். அன்றிரவே முருகப்பெருமான் புதுக்கோட்டையை ஆட்சிச் செய்த தொண்டைமான் மன்னனின் கனவில் தோன்றி பக்தன் காவடியை எடுக்க போவதாகவும் அவ்விடத்தில் தலம் ஒன்றை அமைக்கும் படியும் கூறியுள்ளார். மன்னன் மறுநாள் சென்று பார்த்த போது பக்தன் காவடியை எடுப்பதை கண்டு அந்த இடத்திலேயே நிறுவியுள்ளார். அந்நாளிலிருந்து அத்தலத்தை வடிவமைக்க அரும்பணி மேற்கொண்டார். இத்தலத்தை வடிவமைத்த கட்டிடத்தில் பல்வேறு ஓவியங்களும் சிற்பங்களும் நிறைந்து பண்பாட்டை வலியுத்துகின்றன என்பதனை அறிய முடிகின்றது (Poomonathan, 1909a).

## 7. அத்திதல முருகன் பிள்ளைத்தமிழ்

முருகப்பெருமானை பாட்டைத் தலைவனாகக் கொண்டு சமய கூறுகளையும் வாழ்வியல் அறங்களையும் மனித குலத்திற்குச் சமநிலையில் வழங்கும் நெறியோடும் பண்பாட்டு நெறியோடும் இத்தலம் விளங்குகின்றது. இத்தகு சிறப்பு மிக்க அத்திதல முருகப்பெருமானனின் தலத்தை பற்றி

'நேர் கொண்ட சீலத்தேர் நிறை கைதை நகரத்து

நன்றோங்கி மத்தி தலத்து

நிமலனாஞ் சௌந்தரிய ரூபனென நின்றொளிரும்

நிகரற்ற கவுளை நன்கே”

மு. தியாகராசன் அத்திதல முருகன் பிள்ளைத்தமிழ் காப்பு பருவம் பாடல் 2. என்று அத்திதல முருகன் பிள்ளைத்தமிழ் மு. தியாகராசர் கைதை என்னும் கைதடி நகர் என்று குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று ஔவையாரின் கூற்றாக அமைந்துள்ளது. ஆலயம் அல்லது தலங்களில் தெய்வங்களின் இருப்பிமாகவும் மக்களின் பண்பாட்டு ஊற்றாகவும் திகழ்கின்றன. தமிழ் நாட்டில் பலபுண்ணியத் தலங்கள் ஆங்காங்கே நிறைந்து உள்ளதால் மக்களின் வழிப்பாட்டிற்கும் பண்பாட்டிற்கும் சிறப்பானதாக அமைந்துள்ளது. இறைவன் கோயில் கொண்டு இருக்கும் இடத்தையே தலம் என்று அழைக்கப்படுகிறது. இத்தலத்தின் சிறப்பு கருவறையில் வீற்றிருக்கும் இறைவனின் அருள் தன்மை முதலியவற்றையே குறிக்கோளாகக் கொண்டு தலவரலாறுகள் பாடப்பட்டுள்ளது. இத்தல வரலாற்றில் இறைவன் இறைவியின் திரு நாமங்கள் தலவிருட்சம் தலத்தைச் சுற்றிய இயற்கைச் சூழல் இறைவனின் திருநாமங்கள் இறைவனின் அடையாள சின்னமாகிய கொடிமரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தலவரலாறுகள் பாடப்பட்டு வருகின்றது. பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் ஏறத்தாள முன்னூக்கும் மேற்ப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முருகப்பெருமான் பற்றிய ஏழு பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் வரும் குமரன் வீற்றிருக்கும் தலத்தின் முழு வரலாறுச்செய்திகளை பண்பாட்டு முறைகளோடு எடுத்துக் கூறும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது. மேலும் தல அமைப்புகள் மூர்த்தி தல தீர்த்தம் தல அமைவிடம் தலம் திறக்கும் நேரம் தமிழ் இலக்கியங்களில் தலத்தை புகழ்ந்து பாடுதல் மற்றும் ஒவ்வொரு தலமாகச் சென்று இறைத்தொண்டர்கள் பண்பாட்டு உணர்வுடன் பாடிய விதம் போன்றவை மக்களுக்கு எடுத்து கூறும் பாங்கில் அமைந்துள்ளதை பற்றி விரிவாக ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

## References

Ainthagakavi Veeraraakava Muthaliyaar, (1902) Seyur Murugan Pillai Tamil, Ainthagakavi Veeraraakava Muthaliyaar, Kalkalam, Kuppusamy, Muthaliyaar Pathippagam, Chennai, India

Eramasamyppulavar, S.A., (1774) Thiruporunr Murugan Pillaitamil, Thirunevaeli Theinthiya Chaivachithaaintha Noorpathippagam, Chennai, India.

Poomonathan, T., (1909) Ettikudi Murugan Pillai Tamil, Nataekavuintar.Kovai. K, Mathurai Tamil Illakiyam Min Thokuppu.

Poomonathan, T., (1909) Kumaramalai Murugan Pillai Tamil, Nataekavuintar. Kovai. K, Mathurai Tamil Illakiyam Min Thokuppu.

Thiyaakarashan, (1986) Anthithala Murigan Pillai Tamil, Sri Kaintha Aichagam, Kaithati Maithi, Kaithati Nallai, Aatheenam, Yaalpanam.

Thurai, (2003) Muthukumara Swami Pillai Tamil, Erachaaram-Chittu Noolagam, Chennai, India

Thurai, (2003) Thiruchendhur Murugan Pillai Tamil, Erachaaram-Chittu Noolagam, Chennai, India.

Viswanathan, A., (2007) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License